27th March 1958]

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, in the speech delivered by the Hon. the Finance Minister and circulated to all hon. Members of this House, I find that in paragraph 2, a sentence runs as follows : " The size of the supplementary demand is indeed large, but this should not cause us undue concern because savings of about the same order as the additional amounts asked for under revenue and capital accounts are available under the different grants." Sir, we have been pointing out on the floor of this Assembly and also through the various Committees such as the Public Accounts Committee that the Departmental Heads do not put up proposals in time pointing out the savings that are likely to occur at the end of each year. If they had properly assessed the expenditure, this could have been anticipated by the Heads of Departments and there would not have been such a large saving. 10-13 a.m.

Another thing is, with regard to the savings, the Hon. the Finance Minister has not given us the figures. Even though I went through the whole report in detail, I did not find the figures. I am unable to understand what the correct figures of the savings are. If correct figures are given, hon. Members may be able to appreciate. But the statement is very vague. This is my submission.

On page 18 of the report, Sir, we find that about a sum of Rs. 15 lakhs has been set apart for sinking of wells under the Grow More Food Campaign. I want to know from the Hon. the Finance Minister whether this scheme is being continued because some time back I was given to understand that this scheme has been wound up and that the money due is being collected through the Collectors of Districts. I want some clarification on this point from the Hon. the Finance Minister. (The Hon. Sri C. Subramaniam : This question was already discussed in the Public Accounts Committee.)

Then, Sir, with regard to page 19 of the report, I find that about Rs. 3,62,900 have been provided for the acquisition of lands for the Neyveli Lignite Project. Though this amount is to be reimbursed from the Government of India revenue, still I want to know whether such a large amount should be set apart because I know what these land acquisition proceedings are. In every district there has been abnormal delay with regard to these proceedings and the amount set apart is not likely to be spent in the current year. That is my humble submission, Sir, and I hope the Hon. the Finance Minister will look into these things also.

Another point which I would like to emphasise is this. On page 14, a sum of Rs. 14,77,900 has been provided for Cyclone Relief. This cyclone was some time in the year 1955 and I am really surprised to note that this large amount was not paid then. This could have been anticipated as this happened in 1955. So, this also requires some clarification. I would request the Hon. the Finance Minister to enlighten the House on this point.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [27th March 1958

On the whole, the Hon. the Finance Minister is approaching us for a sum of two crores and sixty lakhs and odd. For asking this huge amount, the Hon. the Finance Minister must tell the House clearly what the budget position will be after the allotment is sanctioned. I hope he will give a clear picture of this. I am of the opinion that if all the Departmental Heads had appropriately assessed the whole thing, the Hon. Finance Minister would not have come before this House with this large demand. So far as all the Departments are concerned, my submission is that the amount can be reduced as much as possible without at the same time impairing efficiency. With these remarks, I end my speech. Thank you, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, பல அங்கத்தினர்கள் இதிலே அதிகமாக அக்கரை எடுத்துக்கொண்டு பேசியதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் அண்ணுமலை அவர்கள் கூட்டல்போட்டு அதில் இருக்கக்கூடிய தவறுதலைக்கூட எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு அவ்வளவு நுணுக்கமாக இதை படித்திருக்கிருர்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் கூட்டல் பிரகாரம் ரூ. 7,70,300 வரவேண்டும். இதில் ரூ. 7,70,200 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கூட்டலில் 100 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது, இந்த ரூ. 100 எதில் சேர்ந்திருக்கிறது என்பது இப்பொழுது கண்டுபிடிக்க முடியாது. ரூ. 100 அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சாங்ஷன் பண்ணியதால் பரவாயில்லை. ஆனுல் கூட்டல், கழித்தலாவது சரியாக இருக்கவேண்டுமென்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த விவரங்களிலே ஏதாவது ஒரு சிறிய ரூ. 100 அயிடம் இருந்தால் அதை விட்டிருந்தாலும் விட்டிருக்கலாம். அது என்ன என்பதை நான் கவனிக்கிறேன்.

10-20 a.m. முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்ருல், இப்பொழுது நாம் ரூ. 19 கோடிக்கு பக்கமாக உபமான்யம் வேண்டுமென்று கோருகிறோம். இதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர்கள்கூட குறிப்பிட்டார்கள். நான் முன்பு சொல்லியதுபோல, இதில் இந்த வருஷத்தில் வாங்கிய கடனை மத்திய சர்க்காருக்கு திருபிப்க்கொடுப்பதற்காக ரூ. 9 கோடி கோரப்படுகிறது. வேண்டிய செலவிற்கு நம்மிடம் பணம் இல்லாமலிருக்கும் போது மத்திய சர்க்காரிடமிருந்து கடன் வாங்குகிறோம். ஒரு வருஷத்தில் வாங்கும் கடனை அந்த வருஷத்திற்குள்ளேயே திருப்பிக் கொடுத்துவிடுகிறோம். வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்கும்போது, நம் கஜானுவிலிருந்து தான் பணத்தை எடுத்துக்கொடுக்கிறோம். அப்போது நம் கணக்கில் மாறுதல் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு நாம் பணத்தைத் திருப்பிக்கொடுப்பதற்கும் சட்டசபையில் அனுமதிவேண்டும். அந்தக் கணக்கில் ரூ. 9 கோடி ரூபாய் போய்விடுகிறது.

அதற்கடுத்தபடியாக, 10 கோடி ரூபாய் செலவாகும் கணக்கு. இந்தப் பகுதியில் உள்ள தொகையும் முந்தை வருஷங்களில் இருந்ததைவிட கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்கு பொதுக் கணக்குக் கமிட்டியும்கூட முக்கிய காரணமாக இருந்தது என்று சொல்லவிரும்புகிறேன். அதாவது பொதுக் கணக்குக் கமிட்டி செலவுக் கணக்குகளை ரொம்பவும் துருவித் துருவி ஆராய்ந்தது. எடுத்துக்கொள்ளப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் இருந்தால், கமிட்டி அதற்குக் காரணம் கேட்கும். கொடுக்கப்பட்டதற்கு மேல் அதிகமாகப் பணம் செலவழிக்கப்பட்டிருந்தால், என் 'ஸப்ளிமெண்டரி டிமாண்ட்' போடவில்லை என்று கமிட்டி கேட்கும். அந்தமாதிரி கமிட்டி ஆராய்ந்தது. அதன் விளைவாக, இப்போது, பொதுக் கணக்குக் கமிட்டி என்றுலே சர்க்கார் அதிகாரிகளுக்கு கொஞ்சம் நடுக்கம் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன். கொடுக்கப்பட்ட பணத்தில் செலவழிக்கப்படாததை இலாகா மார்ச் 31-ம் தேதிக்குள் திருப்பிக்கொடுக்கவேண்டும். அதிகப் பணம் வேண்டுமென்ருல் ஜனவரியிலோ பிப்ரவரியிலோ கோரிப்பெறவேண்டும். மார்ச் 31-ம்

27th March 1958] [Sri C. Subramaniam]

தேதிக்குள் சர்க்காருக்கு திருப்பிக்கொடுக்கவேண்டிய பணத்தை திருப்பிக் கொடுக்காமல் செலவழித்துவிட்டால் பிறகு பல கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டும். முன்னதாகவே அதிகப் பணம் கேட்காமல் செலவழித்து விட்டால் பின்னுல் சரிசெய்யமுடியாது. ஆகையால்தான் பல இலாகாக்கள் கொஞ்சம் அதிகமாகவே பணம் கேட்டிருக்கின்றன என்பது என் அபிப் பிராயம்.

திட்டமிடாமல் செலவழிப்பதால்தான் இப்படிப்பட்ட தொல்லைகள் வரு கின்றன என்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் கூறினர். உண்மையில், திட்டம் போட்டுத்தான் இவ்வாறு அதிகமாகச் செலவுசெய்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். முதலில் பட்ஜெட் தயாரிக்கும்போது அது அதிகமாகத் துண்டுவிழும் பட்ஜெட்டாக அமைந்துவிட்டால் அதுவே பெரிய நெருக் கடியை உண்டாக்குகிறது. ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு ராஜ்யமும் செலவழிக்கவேண்டிய தொகையை திட்டக் கமிஷன் நிர்ணயம் செய்கிறது. சென்ற வருஷம் நாம் 35 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கக்கூடாது என்று திட்டக் கமிஷன் கூறியது. ஆகவே திட்டச்செலவுகளை குறிப்பாக மூலதனச் செலவுகளை—35 கோடி ரூபாய்க்குள் கொண்டுவர முயற்சி செய் கிறோம். அந்த அளவிற்கு சில திட்டச்செலவுகளைக் குறைக்கிறோம். உதாரண மாக, நடப்பு ஆண்டில் மின்சார இலாகாவினர் 13½ கோடி ரூபாய் கேட் டிருந்தனர்; ஆனல் நாங்கள் 12 கோடி ரூபாய்தான் கொடுத்தோம். அவர்கள் கேட்டபடி 13½ கோடி ரூபாய் கொடுத்திருந்தால் திட்டங்களின் மொத்தச் செலவு 32 கோடியாக இப்போது இருப்பதற்கு மாறாக 34 கோடியாக உயர்ந்திருக்கும். அப்படிப்பட்ட திட்டத்தைச் தாயாரித்திருந் தால் பலர் ஆட்சேபனை கிளப்பியிருப்பார்கள். அவ்வாறு சில இலாகாக்கள் கேட்ட தொகைகளை நாங்கள் குறைத்திருந்தாலும், பிறகு மூன்று மாதங் களுக்கு ஒரு முறை திட்டங்களின் நிலவரத்தையும் செலவுகளையும் பரி சீலனை செய்கிறோம். அவ்வாறு பரிசீலிக்கும்போது, அதிகத்தொகை கோரும் இலாகாக்களுக்கு அந்தத் தொகையை கொடுக்கலாமா அல்லது செலவைக் குறைத்துக்கொள்ளும்படி அவைகளிடம் சொல்லலாமா என்று பார்த்து, தகுந்தபடி முடிவுசெய்கிறோம். சில திட்டச் செலவுகளைச் குறைக்க லாம் என்று நாங்கள் நினைத்தால் இலாகாக்களிடம் அந்த யோசனையைச் சொல்கிறோம். அவர்களும் குறைத்துக்கொள்கிறார்கள். அதிமாகச் செல வழிக்கலாம் என்று நாங்கள் தீர்மானித்தால் இலாகாக்களிடம் அவ்வாறு சொல்கிறோம். ஆகவே செலவை அதிகரிப்பதோ குறைப்பதோ தகுந்தபடி அப்போதைக்கப்போது செய்யப்படுகிறது. இருக்கக்கூடிய பண வசதிகளைப் பொறுத்துத்தான் அவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது. இலாகாக்கள் அதிக மாகக் கேட்கும் பணத்தைக் கொடுப்பதற்கு ஏற்ற அளவு நிதி வசதி இல்லை யென்றால், அவர்களை செலவைக் குறைத்துக்கொள்ளச் சொல்கிறோம். செலவு அவசியம் என்று நாங்கள் கருதும் நிலையில் பண வசதி இருந் தால் அதிகமாகக்கோரும் பணத்தை அனுமதிக்கிறோம். அவ்வாறெல் லாம் பரிசீலிக்கும்போது, துரிதமாக நிறைவேற்றவேண்டிய திட்டங்களை துரிதமாகவே நிறைவேற்றவேண்டுமென்பதையும் மெதுவாக நிறைவேற் றக்கூடிய திட்டங்களை தாமதிக்கலாம் என்பதையும் மனதில் கொண்டு தான் அதிகப்பணத்தை அனுமதிப்பதையோ செலவைக் குறைப்பதையோ செய்கிறோம். இருக்கக்கூடிய நிதிநிலையை அனுசரித்தே இதையெல்லாம் செய்கிறோம். சென்ற ஜூன் மாதம் பட்ஜெட்டை சமர்ப்பித்தபோது, அதில் 10 கோடி ரூபாய் துண்டுவிழுகிறது என்றும் அந்தப் பணம் எங்கிருந்து கிடைக்கப்போகிறதோ என்றும் கூறியதுடன், எப்படியும் நிதி நிலைமையை சமாளிக்கலாம் என்று நான் நம்பிக்கை தெரிவித்ததும் கனம் அங்கத் தினர்களுக்கு ஞாபகம் இருக்கும். அப்போது, நான் அவ்வாறு கூறிய போது 'இந்த அரசாங்கத்தார் இப்படியே நம்பி நம்பித்தான் மோசம் போகப்போகிறார்கள்' என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் கள் அவர்களுடைய பாணியில் அவ்வாறு கூறினார்கள். நான் அப்போது தெரிவித்த நம்பிக்கை நிறைவேறிவிட்டது. நாங்கள் நிதி நெருக்கடியை உண்மையிலேயே சமாளித்துவிட்டோம் என்று நிதி நெருக்கடியை சமாளிப் பதற்கான தைரியமும் சக்தியும் எங்களுக்கு இருக்கிறது என்பதை நிரு பித்துக் காட்டிவிட்டோம் என்றும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள

[Sri C. Subramaniam] [27th March 1958

விரும்புகிறேன். பட்ஜெட்டில் பல இனங்களில் செலவைக் குறைத்திருந்தாலும்கூட, பிறகு நடைமுறையில் அவ்வப்போது அவசியமானால் அதிகத் தொகை அனுமதிக்கப்படுகிறது.

இந்த சபைக்கு இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். எடுத்துக் கொள்ளப்படும் திட்டங்கள் இரண்டு வகைப்பட்டவை. இந்த சபை ஒத்துக் கொண்ட திட்டங்கள் ஒரு வகை. புதிதாக வரக்கூடிய திட்டங்கள் இரண்டாவது வகை. சபை ஒத்துக்கொண்ட திட்டங்களைப் பொறுத்தவரையில், அதிகமாகச் செலவழிக்கவேண்டுமா அல்லது குறைவாகச் செலவழிக்க வேண்டுமா என்பதுபற்றி முடிவுசெய்யும்போது, நிதி நிலையை அனுசரித்துத் தான் முடிவுசெய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால் அந்தத் தொகைகள் பற்றி கவலைப்படவேண்டியதில்லை. திட்ட வேலைகள் காலாகாலத்தில் செய்துமுடிக்கப்படாமல் இருக்கும்போது நிதிநிலைமைக்கு மீறிய முறையில் அதிகப் பணம் அனுமதிக்கப்பட்டால் அப்போது கவலைப்படவேண்டும். ஆனால் இருக்கக்கூடிய நிதி வசதிக்கு உகந்த முறையில் இந்த இனங்களில் பணம் ஒதுக்குவதால் இந்தத் தொகைகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் புதுத் திட்டங்களைப் பொறுத்தவரையில், சபையின் ஆதரவையும் அனுமதியையும் பெறவேண்டியிருக்கிறது. சில திட்டங்களை ஆரம்பித்துவிட்டாலும், பிறகாவது சபையின் அனுமதியைப் பெறவேண்டியிருப்பதால்தான் ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டங்கள் சபைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. புதிய திட்டங்களுக்காக அதிகப் பணம் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றிய கணக்குகள் சபையின்முன் வைக்கப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இலாகாக்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படவேண்டுமென்று அந்தக் கணக்குகள் தெரிவிக்கின்றன. பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், இந்தக் கணக்குகளால் பெரிய மாறுதல் ஏற்படவில்லை. இந்தப் புள்ளிவிவரங்களைக் கொண்டுதான் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படிதான் இந்தக் கணக்குகளும் இருக்கும். ஆகவே பட்ஜெட் நிலைமையைப் பற்றி இப்போது கவலைப்படவேண்டியதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில செலவுகளைப்பற்றி நாம் முன்பே யோசித்திருக்கக் கூடாதா என்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் கேட்டார். உதாரணமாக, தீயணைக்கும் இலாகாவுக்கு இப்போது அதிகப் பணம் அனுமதிக்கும் செலவைக் குறிப்பிட்டு, அதைப்பற்றி முன்பே யோசித்துமுடிவு செய்திருக்கக்கூடாதா என்று அவர் கேட்டார். நாங்கள் அதை முன்பே கவனித்தோம். அப்போது, 10 லட்சம் ரூபாய் அதிகமாகவேண்டுமென்று தீயணைக்கும் இலாகாவினர் கேட்டிருந்தனர். நமக்கு இருக்கும் நிதி நிலைமையில் அவ்வளவு பணம் கொடுக்கமுடியாது என்றும் செலவைக்குறைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர்களிடம் அப்போது சொன்னோம். குறைத்துக்கொள்வது சாத்தியமல்ல என்று அவர்கள் சொன்னார்கள். பிறகு பரிசீலித்து 8 லட்ச ரூபாய்க்கு அதிகச் செலவு அனுமதித்தோம். ஆகவேதான் அந்தத் தொகையை சபையில் சமர்ப்பித்திருக்கும் கணக்கில் சேர்த்திருக்கிறோம். அப்போது இருந்த நிதி நிலைமையை அனுசரித்து அது ஒத்துக்
10-30 a.m. கொள்ளக்கூடியதாக இல்லை. அதைக் குறைக்கவேண்டும் என்று சொல்லியிருந்தோம். அப்புறம் பார்த்ததில் அதைக் குறைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியதனால் அந்தக் காரியத்தைச் செய்துவிடலாம் என்று உத்தரவு போட்டோம். அதனால் ஏற்பட்டதுதான் இந்தச் செலவு.

அதேமாதிரிதான் இரிகேஷனிலும். இவையெல்லாம் முன்னால் சாங்ஷன் செய்யப்பட்ட திட்டங்கள்தான். நிதிநிலைமை அப்போது சரியில்லை என்பதனால் எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று உத்தரவு போட்டிருந்தோம். அவைகளை எடுத்துச் செய்துவிடலாம் என்கிற நிலைமை ஏற்பட்டவுடன் அதை எடுத்துக்கொள்ள உத்தரவு போட்டோம். அதன் காரணமாகத்தான் இந்தச் செலவுகள் ஏற்பட்டன. ஆகவே எதிர்பார்த்ததற்கு மாறாக ஒன்றும் செலவு செய்துவிடவில்லை. தேர்தலினால் எதிர்பாராத

27th March 1958] [Sri C. Subramaniam]

ஏற்பட்ட செலவுகள் தவிர்க்கமுடியாதது. இந்தச் செலவு ஏற்படலாம் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் தேர்தல் செலவைப் பொறுத்த வரையில் தவறாக ஏற்படவில்லை.

அதற்கடுத்தபடியாக கட்டிடத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நாம் அதிகமாகப் புதுக் கட்டிடங்கள் கட்டவில்லை என்று குறிப்பிட்டார்கள். நாம் கட்டியிருக்கக்கூடிய புதுக் கட்டிடங்கள் புதிய காலேஜ்கள், இன்ஜினிரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் போன்றதுதான். இந்தக் கட்டிடங்களைத் தவிர அலுவலகங்களுக்காகக் கட்டியிருக்கிற கட்டிடங்கள் மிகமிகக் குறைவு. அதைக் குறித்து வருத்தப்படவேண்டிய அவசியம் இல்லை. நமக்கு அதிகத் தொகை மிச்சம் இல்லாமலிருந்ததால் கட்டாமல் விட்டிருக்கலாம். நமக்கு முன்பு துண்டு விழுந்திருந்தது. கட்டிடச் செலவைக் குறைத்துக்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடுவது என்று முன்பு முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி புதுக் கட்டிடங்களைக் குறைத்துக்கொண்டிருக்கிறோம். பழைய கட்டிடங்களாக இருந்தாலும் அதை சிறிதளவில் செப்பனிட்டு அலுவலகங்களை நடத்தி வந்திருக்கிறோம் என்பதைப்பற்றி நாம் பெருமைகொள்ளவேண்டுமே தவிர புதிய கட்டிடங்கள் ஒன்றும் இல்லையென்று வருத்தப்படவேண்டியதில்லை. மேலும் அப்போதே ஏன் இதற்குப் பணம் ஒதுக்கியிருக்கக்கூடாது என்று கேட்டார்கள். அதைக் கட்டுவதில் மிலிடெரி இலாகாவை அனுமதி கேட்கவேண்டியிருந்தது. அதுவும் ஒரு சிறிய இடம். அதற்கு அனுமதி வேண்டியிருந்தது. அந்த அனுமதியைப் பெறுவது எப்போது சாத்தியம் என்பது தெரியாமல் இருந்த காரணத்தினால் அப்போது அனுமதிக்கப்படவில்லை. அந்தத் திட்டத்தை ஏன் முதலிலேயே சபையில் சமர்ப்பிக்கவில்லை என்று கேட்டார்கள். எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் சிறு சிக்கல் இருந்தாலும் நன்றாகப் பரிசீலனை செய்து முடிவில்தான் இந்தச் சபையில் அது வைக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் அந்தக் கட்டிடம் மிகவும் அவசியமானது என்பதை நாங்கள் உணர்ந்திருந்தோம்.

அதிலே முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது இப்போது நம் காரியாலயம் நடப்பதற்கு இட வசதி வேண்டுமென்பதை எல்லோரும் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கடுத்தபடியாக நம்முடைய பழைய சட்டசபைக் கட்டிடத்தைப்பற்றிப் பேசப்பட்டது. அதை குழந்தைகளுடைய தியேடராக மாற்றி அமைக்கலாம் என்று செய்திருக்கக்கூடிய முடிவைப்பற்றிப் பலர் குறைகூறினார்கள். நாம் அதைக் குறையாக ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை. அந்தக் கட்டிடம் கட்டுகிற காலத்திலேயே தாற்காலிகமான கட்டிடமாகத்தான் அதைக் கட்டியிருக்கிறார்கள். பின்னால் அந்தக் கட்டிடத்தை என்ன செய்யலாம் என்பது பற்றியும் யோசிக்கப்பட்டிருக்கிறது. அப்போதே அதை ஒரு தியேட்டராக மாற்றி அமைக்கலாம் என்பதும் யோசிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்திலிருந்து நாம் இங்கே வந்தபிறகு அதைப்பற்றி யோசித்திருக்கிறோம். இது அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்தக் கட்டிடத்தில் இரண்டு பகுதி இருக்கிறது. நாம் கூட்டம் கூடிய இடம் ஒரு பகுதி, காரியாலயங்கள் இருந்த இடம் இரண்டாவது பகுதி. காரியாலயம் இருந்த இடத்தில் இப்போதும் காரியாலயங்களை வைக்கலாம். நாம் கூட்டம் கூடிய இடத்தைத்தான் முதல் சலுகையாக குழந்தைகளுடைய தியேட்டராக மாற்றி அமைக்கலாம் என்பது முன்பே பரிசீலனை செய்யப்பட்டு, பிறகு மந்திரி சபையும் நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்திருக்கிறது. இந்த யோசனை யாரோ ஒருவருடைய மூளையில் தோன்றி அப்படியே வந்துவிட்டதாக நினைக்க வேண்டியதில்லை. எந்தக் கருத்தும் யாரோ ஒருவருக்கு முதலில் தோன்றித்தான் ஆகவேண்டும். இந்த முடிவு பலராலும் யோசிக்கப்பட்டே வந்திருக்கிறது. அதோடு முன்பு அங்கேயிருந்த மேஜை குறிச்சிகளை எல்லாம் நாம் எடுத்துவந்துவிட்டோம். திரும்ப நல்லமுறையில் அவைகளை அங்கே தயாரித்து வைப்பதற்காகத்தான் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய சினிமாவுக்குப் போட்டியான சினிமாக்கள் அங்கே நடைபெறாது. குழந்தைக்கு ஏற்றவைதான் அங்கே வரும் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். ரோடு டிரான்ஸ்

போர்ட்டில் செலவு அதிகம் காணப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். இது புதிய கணக்கில் இல்லை. அனுமதேயக் கணக்கில் இருந்து 35 லட்சம் ரூபாய் மாற்றவேண்டுமென்று கவனித்தோம். சில இனங்களில் எட்டு லட்சம் கூடுதலாக வேண்டியிருந்தது. இதில் புதிய செலவு ஒன்றும் கிடையாது. ஆகவே இதைப்பற்றியும் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். நெய்வேலி லிக்னைட் சம்பந்தமாக நஷ்டஈடு கொடுப்பதுபற்றி சொன்னார்கள். இந்தச் சபை சட்டம் இயற்றியிருக்கிறது. அதன்படி நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது. அதில் தவறு ஏதாவது இருந்தால் குறிப்பாக எந்த இடத்தில் தவறு ஏற்படுகிறது என்பதைக் குறிப்பிட்டால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

ஸ்ரீ சின்னதுரை பேசினது பொதுவான விஷயங்கள். அதற்கு நான் பதில் சொல்லப்போனால் அவர் செய்த தவறையே நானும் இழைக்க வேண்டி நேரிடும். அவர் சொன்னது முக்கியமான விஷயங்கள்தான். ஆனால் எதை எதை எந்த எந்தச் சமயத்தில் சொல்லவேண்டும் என்பது உண்டு. ஆகவே அவர் சொன்ன முக்கியமான விஷயங்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பதிலளிப்பதற்கில்லை.

அதற்கடுத்தபடியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 13 லட்சம் ரூபாய் கிணறு மானியத்தில் கண்டிருக்கிறதே, அந்தத் திட்டம் இன்னமும் அமுலில் இருக்கிறதா என்று கேட்டார்கள். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இந்த விஷயம் பரிசீலனை செய்யப்பட்டது அவருக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு முன்பு கொடுக்கப்பட்ட தொகைகள் சரி செய்யப்படாமல் இருந்தது. அவைகளுக்கு எல்லாம் காலத்தை நீடித்துவைத்து பிப்ரவரி 28-ந் தேதிக்குள்ளாக வேலை தொடங்கப்பட்டிருந்தால் கடனாகக் கொடுக்கப்பட்டிருந்த தொகையை மானியமாக மாற்றிவிடலாம் என்பதை மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

10-40 a.m. அந்த முறையிலே இதுவரையில் கடனாகப் பாவிக்கப்பட்ட தொகைகள் மான்யமாக இப்பொழுது மாற்றப்பட வேண்டியிருக்கிறது. சுமார் 13 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்ததை மான்யமாக்க வேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் இந்த 13 லட்சம் ரூபாய் மான்யமாகக் கொடுக்க இந்த சபையின் அனுமதி கோரப்படுகிறது. இது, புதிதாகக் கொடுக்கப்படுகிறதல்ல. முன்பு கொடுத்த கடன் தொகையை மான்யமாக மாற்ற, இப்பொழுதுள்ள விதிகளுக்கிணங்க இது மாற்றப்படுகிறது. அடுத்தபடியாக, சைக்ளோண் ரிப்பேர்களுக்காக, அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு இப்பொழுது பல மராமத்து வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் சில வேலைகளைச் செய்வதா இல்லையா என்று யோசனையில் இருக்கிறது. இனாம்தார், மற்றவர்களின் சொந்தமான குளங்களைப் பழுது பார்க்க சர்க்கார் செலவு செய்யவேண்டுமா என்று யோசனையில் இருந்தது. அவர்கள் செலவு செய்வதாகயில்லை. ஆகவே யோசனை செய்து சர்க்காரே செலவு செய்து அவர்களிடமிருந்து வஜா செய்ய சட்டமிருக்கிறது. இது, தனிப்பட்ட விஷயமல்ல. இது, உணவு உற்பத்தியைப் பாதிக்கக்கூடியதும், குடியானவர்களையும் பாதிக்கக்கூடிய விஷயமுமாகும். ஆகவே, அக்குளங்களை ரிப்பேர் செய்ய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்பணம் இனாம்தார்களிடம் இருந்து வசூல் செய்யப்படும் என்று குறிப்பிலேயே இருக்கிறது. இன்னொரு விஷயம் இங்கு குறிப்பிடப்பட்டது. கட்டிடங்கள் கட்டுவதை துரிதமாக செய்யவேண்டுமென்று, கல்யாணசுந்தரம் அவர்கள் என்று நினைக்கிறேன், குறிப்பிட்டார்கள். முதுகுளத்தூர் குழப்பங்களால் ஏற்பட்ட விபத்துக்களுக்கு ஆளாகியிருக்கக்கூடியவர்களுக்கு உதவி செய்ய புதுக் கட்டிடங்கள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த சபையிலேயே இதுபற்றி பல புகார்கள் சொல்லப்படுகின்றன. அவசரம் அவசரமாக வீடுகள் கட்டி அவைகள் கீழே விழுகின்றன என்று சொல்வதைக் கேட்கிறோம். அதே சமயத்தில் கட்டிடங்கள் மெதுவாகக் கட்டப்படுகிறது என்று குறை சொல்வதையும் கேட்கிறோம். கட்டிடங்கள் நன்கு கட்டப்பட்டு அவைகள் ஸ்திரமான நிலையில் இருக்கும்படிக் கட்டுவது மிகவும் அவசியமாகும். ஆகவே, காலதாமதம் சிறிதானாலும் கட்டிடங்கள் நல்ல முறையில்